1974 ஏப்ரல் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு, இந்த அவையை ஒத்தி வைத்து இதைப்பற்றி விவாதிக்கத் தேவையில்லை யென்று கருது கிறேன். ஆகவே, இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

அடுத்து, கவன ஈர்ப்புத் தீர்மானம்.

3. கவன ஈர்ப்பு.

(அ) சென்னை மாநகரில் குடிநீர் தட்டுப்பாடு.

THIRU G. R. EDMUND : Sir, I call the attention of the Hon. Minister for Public Health to a matter of urgent public importance, namely, the deteriorating position of drinking water supply in Madras City.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I call the attention of the Hon. Minister for Public Health to a matter of urgent public importance, namely, the deteriorating position of drinking water supply in Madras City.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டில் பருவ மழை ஓரளவு தவறியதன் காரணமாக சென்னை மாநகருக்கு நீர் வழங்கும் நீர்த் தேக்கங்களில், அதாவது, சத்திய மூர்த்தி சாகர், சோழவந்தாள் ஏரி, புழலேரி ஆகிய நீர்த் தேக்கங்களில் உள்ள நீரின் அளவு மிகவும் குறைந்துள்ளது. சென்னை மாநகருக்கு வழங்கப்படும் நீரின் அளவை படிப்படியாகக் குறைக்க வேண்டியது அவசியமாக உள்ளது. இந்நிலையைச் சமாளிக்கத் தேவையான நடவடிக் கைகளை மாநகராட்சி எடுத்துள்ளது. அவற்றின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகரத்தில் வழங்கப்படும் குடிநீர் அளவு நாளொன்றுக்கு 52 மில்லியன் காலனிலிருந்து டிசம்பர் 1973-லேயே அது 48 மில்லியன் காலனாகவும், ஜனவரி 1974-ல் வெறும் 40 மில்லியன் காலனாகவும், பிப்ரவரி 1974-ல் 35 மில்லியன் காலனாகவும், (அதுவும் கூட பஞ்செட்டி, தாமரைப்பாக்கம் ஆகிய இடங்களில் துளைக் கிணறுகளிலிருந்து கிடைக்கும் நிலநீர் உட்பட) குறைக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் தற்போது கிடைக்கும் தண்ணீரை அக்டோபர் 1974 வரை, அதாவது அடுத்த பருவ மழை வரை நீடித்துப் பயன்படுத்த முயற்சிக்கலாம்.

[திரு. க. அன்பழகன்] [1974 ஏப்ரல் 10

மாநகராட்சி வழங்கும் குடிநீரைத் தோட்டங்களுக்குப் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டது. மேலும், மாநகராட்சி மூலக் குழாய்களிலிருந்து தண்ணீரை மின்சார விசையேற்றங் களின் மூலம் நேராக எடுத்துக் கொள்வது, குடிநீரைத் தவருன முறைகளில் பயன்படுத்துவது போன்ற நேர்வுகளில், குடிநீர் இணைப்புகளைத் துண்டிக்கவும் மாநகராட்சி நடவடிக்கை எடுத்திருக்கிறது.

பழுதடைந்த குழாய்க் கிணறுகள் (சென்னை மாநகராட்சியும், தமிழ்நாடு அரசும் 1969-ம் ஆண்டு வறட்சிக் காலத்தில் அமைத்த குழாய்க் கிணறுகள்) புதுப்பிக்கப்பட்டு பயனுக்குக் கொண்டு வரப்படுகின்றன.

புதுக்குழாய் இணைப்புக்கள் கொடுப்பது 1—1—1974 முதல் நிறுத்தப்பட்டது. மீட்டர் பொருத்தப்பட்ட குடிநீர் இணைப்புக் களுக்கு இலவசக் குடிநீர் வழங்கும் அளவு 1—2—1974 முதல் தற்காலிகமாக 50 சதவீதம் குறைக்கப்பட்டது. வீடுகள் கட்ட குழாய் இணைப்புகள் மூலம் குடிநீர் வழங்குவதும் 1—4—1974 முதல் நிறுத்தப்பட்டது.

மாநகராட்சியின் பல்வேறு குறுக்களவுகளைக் கொண்ட தற்போதுள்ள 122 திறந்த கிணறுகளைப் பரிசோதிப்பது, தூர் வாருவது, சுத்தப்படுத்துவது ஆகியவை மேற்கொள்ளப் பட்டுள்ளன.

துறைமுகப் பொறுப்புக் கழகம், தமிழ்நாடு மின்வாரியம், இரயில்பெட்டித் தொழிற்சாலை, பி. அண்டு சி. ஆலை போன்ற நீரை அதிக அளவுக்குப் பயன்படுத்துவோருக்குக் குறைந்த அளவு நீர் வழங்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

நீர் வழங்குவதாவது, 1974-ம் ஆண்டு ஜனவரி திங்களிலிருந்து முழுவதும் நிறுத்தப்படும் என்று பணி நிலையங்களுக்கு அறிவித்தல்.

(அ) குடியிருப்போரின் செலவில் திறந்த கிணறுகளைச் சுத்தப்படுத்தும் பணி மேற்கொள்ளப்படுகிறது.

(ஆ) குடியிருப்போரின் செலவில் அவர்களது சொந்த அளவுக்குள் குழாய் கிணறு பம்புகளுக்கு வசதி செய்தல் என்ற முறையில் குடியிருப்பு இல்லங்களுக்கு உதவி செய்தல். (இப்

1974 ஏப்ரல் 10] [திரு. க. அன்பழகன்]

பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்தக்காரர்களின் முகவரிகள், இப் பணிகளுக்காகும் செலவுத் தொகைகள் குறித்த விவரங்கள் 1—1—1974-ம் நாளிலிருந்து நீர்ப் பணிகள் பொறியாளர் மூலம் கிடைக்கப்பெறும்).

சென்னை மாநகராட்சித் தனி அலுலர் ஆலோசனை கூறியுள்ள கீழ்க்காணும் நடவடிக்கைகள், சம்பந்தப்பட்டத் துறை அலுவலர் களுடன் ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறைச் செயலாளரின் ஆலோசனையோடு 25—1—1974 ஆம் நாளன்று விவாதிக்கப்பட்டு முடிவெடுக்கப்பட்டது.

1. தாமரைப்பாக்கம், பஞ்செட்டி ஆகிய பகுதிகளிலிருந்து நிலநீரைச் செங்குன்றம் ஏரிக்குச் செலவின்றித் திருப்பிவிடுகின்ற முயற்சி ;

2. 1969 ஆம் ஆண்டு வறட்சிக் காலத்தின்போது அரசால் அமைக்கப்பட்ட 12,000 குழாய்க் கிணறுகளையும் அரசு செலவில் துறையின் மூலம் அந்தந்த தலைமைப் பொறியாளர்களினல் பழுது பார்த்தல், புதுப்பித்தல் ;

3. அரசுச் செலவில் மேலும் 3,000 குழாய்க் கிணறுகளை நகரின் பல பகுதிகளிலும் அமைத்தல் ;

4. கீழ்ப்பாக்கத்திலிருந்து நகரின் பல பாகங்களுக்கும் வடிகட்டிய நீரை—தூய நீரை—வழங்குவதற்கு அரசுத் துறையைச் சேர்ந்த 15 லாரிகளைப் பயன்படுத்தல்.

இப் பணிகளுக்காக ஏறத்தாழ ரூ. 50 இலட்சம் செலவாகும் எனத் தனி அலுவலர் மதிப்பிட்டுள்ளார்.

ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை செயலாளர் 6—3—1974 அன்று மேலும் இது குறித்து விவாதித்துள்ளார். தலைமைப் பொறியாளர்கள் ரூ. 3.62 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் 2,235 குழாய்க் கிணறுகளைப் பழுது பார்க்க வேண்டி உள்ளது எனத் தெரிவித்தார். சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளர்கள், பழுதுபார்க்கும் பணியினை முடித்து குழாய்க் கிணறுகளை மாநகராட்சியிடம் ஒப்படைக்க இயலும் வகையில் மேற்சொன்ன 2,235 குழாய்க் கிணறுகளைப் பழுது பார்க்கத் தேவைப்படும் அந்த

[திரு. க. அன்பழகன்] [1974 ஏப்ரல் 10

ரூ. 3.62 லட்சத்திற்கும் உடனடியாக அனுமதி வழங்கிட முடிவு செய்யப்பட்டது. பழுதுபார்க்கும் பணிகள் எல்லாவற்றையும் 1—5—1974-க்குள் முடித்துவிட வேண்டும் என்று முடிவு செய்யப் பட்டது. தலைமைப் பொறியாளர்கள், வரையறுக்கப்பட்ட அந்தத் தேதிக்குள் கடமையை முடிக்கலாம் என்று உறுதி யளித்துள்ளனர்.

மேலும் தேவைப்படும் ரூ. 50 லட்சத்துடன் தாமரைப்பாக்கம், பஞ்செட்டி ஆகிய இடங்களிலிருந்து நீர் கொண்டு வரும்போது நாளொன்றுக்கு 2 மில்லியன் காலன் நீர் விரயமாவதைத் தடுப்பதற்காக சோழவரம் ஏரிப்படுகையில் மேல் வரவு வாயக் காலின் பக்கத்திலும், கீழ் வரவு வாய்க்காலின் பக்கத்திலும், சிறு வாய்க்கால்களை அமைக்கவும் தனி அலுவலருக்கு மேலும் 15 லட்சம் ரூபாய் அந்தப் பணிக்குத் தேவைப்படுகிறது. எதிர்காலத் தேவைக்கும் இது நிலையான ஏற்பாடாக இருப்பதால், மேற்கண்ட தொகைக்கு அனுமதி வழங்கலாம் என ஒப்புக் கொள்ளப்பட்டது.

குழாய்க் கிணறுகளைப் பழுது பார்க்க ரூபாய் 3.62 லட்சம் தேவைப்படுவதுடன் குறைந்துள்ள நீர் வசதி நிலைமையினைப் போக்க அவசர நடவடிக்கை எடுப்பதற்கானச் செலவைச் சரிகட்டுவதற்காக ரூ. 65 லட்சம் தேவைப்படுகிறது. தொடக்கத்தில் ரூ. 20 லட்சம் வழங்குவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் இருக்கிறது. மற்றவை ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கிறது. எனவே, இப்படித் தொடர்ந்து இதற்கான பணிகள் பல்வேறு அளவில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்படுகிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : In this connection I would like to bring to the notice of Hon. Minister for Health that during 1969 when there was a similar experience, there were many wells under private owners and the Corporation was not able to utilise the water from those wells. Will the Government think of requisitioning those wells and make it compulsory on the part of well-owners to allow the Corporation to enter and repair the wells and supply water to the public in the City of Madras?

1974 ஏப்ரல் 10]

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, தற்பொழுது அந்த அளவுக்கு நெருக்கடி நிலை இன்னும் ஏற்பட வில்லை. இப்பொழுது, அவரவர்களுடைய கிணறுகளைப் பழுது பார்த்து வைத்துக்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருக் கிறது. அதற்கு மேற்பட்ட நிலை ஏற்படுமானால், அதுபற்றி யோசிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திருவாளர்கள் பொம்மன், எட்மண்ட், லத்தீப், முனு ஆதி ஆகியோர் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வருவார்கள்.

(ஆ) நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தைச் சேர்ந்த ஆறு தொழிற் சங்கங்கள் வேலைநிறுத்த அறிக்கை கொடுத்திருப்பது குறித்து.

(முற்பகல் 10.30)

THIRU K. H. BOMMAN : Sir, I call the attention of the Hon. Minister for Labour to a matter of urgent public importance, viz., the strike notice given by about six labour unions of the Neyveli Lignite Corporation and the consequences arising out of such notice posing a great disturbance to the industrial peace and the production there.

THIRU M. A. LATHEEF : Sir, I call the attention of the Hon. Minister for Labour to a matter of urgent public importance, viz., the strike notice given by about six labour unions of the Neyveli Lignite Corporation and the consequence arising out of such notice posing a great disturbance to the industrial peace and the production there.

THIRU MUNU ADHI : Sir, I call the attention of the Hon. Minister for Labour to a matter of urgent public importance, viz., the strike notice given by about six labour unions of the Neyveli Lignite Corporation and the consequences arising out of such notice posing a great disturbance to the industrial peace and the production there.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, 21—3—1974 நாளது கடிதத்தில் நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் நிர்வாகத்தினர் அதன் தொழிலாளர்கள் 8—4—1974 அன்றாவது